


## கோயில்கள் மற்றும் ஆகமம் குறித்த கேள்விகளுக்கு எளிய பதில்கள்

**கேள்வி-1: கோயில்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆகமங்கள் எந்த விதத்தில் முக்கியமாகிறது?**

பதில்: கோயில் என்றாலே ஆகமம் சார்ந்ததுதான். சைவ சமயத்தின் முக்கிய நூல்களாகிய சிவஆகமங்கள் 28 ஆகும். சிவ ஆகமங்கள் உலக நன்மைக்காக உலக படைப்பின் முன்னரே சிவபெருமானால் அருளப்பட்டவை. "வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்கிறது திருமறை.

கர்ப்பக்கிருகத்தில் வைக்கப்பட்ட சிலைக்கு இறைத்துவம் கொடுக்க உச்சரிக்கப்படும் பிராண பிரதிஷ்டை மந்திரங்கள், சிற்பசாஸ்திரம் எனப்படும் கோயில் கட்டுமானக்கலை ஆகியவை ஆகமங்களிலிருந்து வந்தவை தான்.

வைணவ கோயில்களுக்கு அடிப்படையான பாஞ்சராத்ர, வைகானச ஆகமங்கள் பகவான் மஹாவிஷ்ணு நேரடியாக ரிஷிகளுக்கு அருளியவை.

**கேள்வி-2: ஒரு கோயில் நிர்மாணம் செய்வது குறித்து ஆகமத்தில் கூறியுள்ள வழிமுறைகள் என்ன ? இதில் யாருக்கு என்ன பங்கு?**

பதில்: ஒருவர் ஒரு கோயிலை கட்ட நினைத்தால், வீடு கட்டுவது போல் உடனே ஒரு மேஸ்திரியையோ நவீன கட்டிட வல்லுனரையோ வைத்து கட்டுமானம் ஆரம்பிக்க முடியாது. கோயில் கட்டுவதற்கு முடிவுசெய்கின்ற ஒரு யஜமான் / அரசன், அதற்காக கோயில் தொடர்பான விஷயங்களைக் கூறுகின்ற

ஆகமங்களில் தேர்ச்சி பெற்ற ஒரு ஆசார்யரை நாடி தன் கருத்தைத் தெரிவிக்கவேண்டும். ஆசார்யர் கோயில் கட்டமைப்பு / விக்ரஹ அமைப்பு போன்ற சில்பசாஸ்திர விஷயங்களில் தேர்ச்சிபெற்ற சில்பியைத் தேர்வு செய்யவேண்டும்.

கோயிலில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்ரஹங்கள் தொடர்பான விஷயத்தில் ஆகமங்கள் சில்பியை தாயாகவும், ஆசார்யனை தந்தையாகவும் குறிப்பிடுகின்றன. கோயில் கட்டுமானம் தொடர்பான செயல்பாடுகள் மற்றும் விக்ரஹ அமைப்பு தொடர்பான விஷயங்களுக்கு சில்பியும், பூஜை தொடர்பான விஷயங்களுக்கு ஆசார்யரும் பொறுப்பானவர்கள்.

திருக்கோயில் தொடர்பான விஷயங்களில் யஜமானர், ஆசார்யர், ஸ்தபதி ஆகிய மூவர் இருந்தாலும் ஆசார்யருக்கே அதிகமான உரிமைகளை ஆகமங்கள் வழங்கியுள்ளன. அர்ச்சகர் என்று நாம் இன்று பொதுவாகக் குறிப்பிடுகின்ற நபரை ஆகமங்கள் ஆசார்யர் என்றே அழைக்கின்றன. திருக்கோயில் தொடர்பான எந்த முடிவையும் எடுப்பதற்கு ஆசார்யருக்கே முழு உரிமை/அதிகாரம் ஆகமங்களில் வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி-3: ஆகமம் சாராமல் கோயில்கள் இருக்க முடியுமா? முன் ஆகமப்படி அமைக்கப்பட்ட கோயிலை பின் ஆகமப்படி அல்லாதது என்று சொல்ல முடியுமா?**

பதில்: எல்லா திருக்கோயில்களும் ஆகமக் கோயில்களே ஒரு திருக்கோயில் எந்த ஆகமத்தைச் சார்ந்தது என்பதை, அங்கு அமைக்கப்பட்டுள்ள பரிவார மூர்த்திகளின் அமைப்பை வைத்தும், அங்கு நடைபெறும் பூஜைமுறைகளை வைத்தும் தீர்மானம் செய்யலாம். ஆனால் ஒரு திருக்கோயில், முழுவதும் ஒரே ஆகமத்தின்படிதான் அமையவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு ஆகமத்தில் சொல்லப்படாத விஷயம் வேறு ஒரு ஆகமத்தில் சொல்லப் பட்டிருந்தால் அவற்றை ஏற்றுக்கொள்ளலாம் என்று ஆகமங்களே கூறுவதால், ஒரு கோயிலுக்கான ஆகமம் காமிக ஆகமம் அல்லது காரண ஆகமம் என்று குறிப்பிடும்போது. அதற்கு காமிக ஆகமம் முக்கியம் என்று பொருள்கொள்ளவேண்டுமே தவிர காமிக ஆகமத்தின்படியே அனைத்தும் அமையவேண்டும் என்பது பொருளல்ல. அதேபோல ஒரே ஆகமத்திலும் ஒரே கிரியைக்கு இரண்டு மூன்று வழிமுறைகள் (choice) வழங்கப்பட்டிருக்கும் நிலையில், ஒரே ஆகமத்தைச் சார்ந்த இரண்டு கோயில்களில் தேர்வு செய்ய வழங்கப்பட்டிருக்கும் வழிமுறைகளின் இருவேறுவிதமான பழக்கவழக்கங்கள் அமைந்திருப்பதற்கான வாய்ப்புகள் அடிப்படையில் அதிகம் என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்த விஷயங்களின் அடிப்படையில் பார்க்கும்போது தமிழ்நாட்டில் உள்ள புராதனமான எந்த ஒரு ஹிந்து கோயிலிலும் குறைந்தது எதாவது ஒரு

ஆகமத்தின் அடிப்படையில்தான் ஒரு கடவுளை ப்ராணப்ரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வித்திருக்க முடியும். அப்படி நடந்திருந்தால் அந்த கோயில் பூமியில் இருக்கும் வரை அந்த ஆகமத்தை சேர்ந்ததாகத்தானே இருக்கும்? எனவே ஆகமம் சாரா கோயில்கள் என்பதே அடிப்படைத்தவறு. புராதனமான கோயில்கள் எல்லாமே ஆகமப்படி அமைக்கப்பட்டுள்ளவைதான்

அந்த கோயிலை கட்டிய எஜமானர் அல்லாதவர்களான அரசோ, நீதிமன்றமோ, மத குருவோ அல்லது வேறு யாராவது ஒருவரோ அந்த கோயிலை ஆகமப்படி அல்லாதது என்று சொல்ல எந்த அதிகாரமும் கிடையாது. ஒரு திருக்கோயில் எந்த ஆகமத்தைப் பெரிதும் சார்ந்திருக்கிறது என்பது அந்தத் திருக்கோயிலின் மரபை அறிந்த அர்ச்சகர்களால் மட்டுமே சொல்லமுடியும். ஆகமம் சாரா வழிபாட்டுத்தலம் என்பது அர்ச்சகர் அல்லாத ஒருவர் கீற்றுக்கொட்டகை அல்லது வீடு போன்ற ஒரு இடத்தில் தாமே இறைவனை வைத்து வழிபாடு செய்வதுதான். அவற்றை கோயில் என அழைக்க முடியாது

**கேள்வி-4: ஆகமப்படி நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கோயில்களில் ஆதி சைவர்கள் அல்லது வைணவ பட்டாச்சார்யர்கள் மட்டுமே பூஜை செய்ய உரிமை உள்ளதா?**

பதில்: சைவ திருக்கோயில்களில் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் என்பவர்கள் சிவபெருமானால் நேரடியாக தீட்சை செய்விக்கப்பெற்ற கௌசிகர் முதலான ரிஷிகளின் வழி வந்த ஆதிசைவர் எனப்படுபவர்கள். பிற ரிஷிகளின் வழி வந்து சைவாகமங்களை கடை பிடிப்பவர்களான பாரசைவர்கள் எனப்படும் பூசாரிகளானவர்கள், ஐயனார், கிராம தேவதைகள் மற்றும் சிறுதெய்வங்களுக்கு பூஜை செய்யலாமென்று ஸ்ரீமத் பூர்வகாரணாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோயில்களுக்கு கர்ஷணம், பிரதிஷ்டை, கும்பாபிஷேகம் போன்றவற்றை ஆதிசைவர் செய்விப்பார்கள். இதே போன்ற முறைகள் வைணவ ஆகமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறன.

**கேள்வி-5: ஒரு கோயிலில் குறிப்பிட்ட ஒரு பிரிவினர் அல்லது உட்பிரிவினர் மட்டுமே பூஜை செய்யலாம் என்று யார் முடிவு செய்தது?**

பதில்: மேலே உள்ள கேள்விக்கான பதிலை படிக்கவும். அத்துடன் இது பல வழக்குகளில் நீதி மன்றங்களில் விவாதிக்கப்பட்டு வழிகாட்டுதல்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

குறிப்பிட்ட பிரிவினர் பூஜை செய்வது ஆகமத்தின்படி மட்டுமன்றி அந்த ஊர் அல்லது கோயில் பாரம்பரியம் மற்றும் வழக்கங்களின் படி முடிவு செய்யப்பட்டிருக்கலாம். கோயில் நிர்மாணிக்கப்பட்ட காலத்தில் இருந்த

முறைகள் பிற்காலத்தில் படையெடுப்பு, கொடும்நோய் போன்ற காரணங்களால் பல நூறு வருஷங்களுக்கு முன் மாற்றப்பட்டிருக்கலாம். இப்போது உள்ள நடைமுறையை தொடர்வது நல்லது.

**கேள்வி-6: ஒரு கோயிலில் அர்த்த மண்டபம், மகா மண்டபம், பலிபீடம், கொடிமரம், உபசன்னதிகள் அல்லது கோபுரம் ஆகியவை இல்லையென்றால் ஒரு கோயில் ஆகம முறைக்கு உட்படாததாகிவிடுமா?**

பதில்: அப்படி ஆகாது. இவைகள் எதுவுமே இல்லாமல் அமைந்த குகை கோயில்களில் கூட ஆகமப்படி பூஜைகள் நடக்கின்றன.

**கேள்வி-7: ஆகமப்படி நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட ஒரு கோயிலில் ஆதி சைவர்கள் அல்லது வைணவ பட்டாச்சார்யர்கள் அல்லாதவர்கள் பூஜை செய்தால் அது ஆகமப்படி அல்லாத கோயில் ஆகிவிடுமா?**

பதில்: அப்படி ஆகாது. ஒரு கோயில் எப்போதுமே அது நிர்மாணிக்கப்பட்ட அகமப்படிதான் இருக்கும். ஒரு நிர்பந்தத்தினாலோ, அந்த ஆகமத்தில் தேர்ந்த அர்ச்சகர் இல்லாத காரணத்தினாலோ, இறை வழிபாட்டில் தடை ஏற்படாமல் இருக்க ஊர் மக்கள் சேர்ந்து வேறு ஒருவரை நியமித்து குறைந்த பக்ஷ பூஜைகள் நடை பெற வழி செய்வது வெகு காலமாக நடைமுறையில் இருந்துள்ளது. இதை நிவர்த்தி செய்ய தக்க வழிகளை தேட வேண்டுமே தவிர அந்த கோயிலே ஆகம மரபில் இல்லாதது என்று சொல்வது அறியாமையே.

பல நீதி மன்ற உத்தரவுகளில், குறிப்பாக 2022-ல், இது தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

**கேள்வி-8: ஒரு கோயிலுக்கு இதற்கு முன் எப்போது கும்பாபிஷேகம் செய்யப்பட்டது என்ற ஆதாரங்கள் இல்லாவிட்டால், கோயிலின் அம்சங்களை கொண்டு அது எந்த ஆகமத்தை சேர்ந்தது என்று சொல்ல முடியுமா?**

பதில்: கோயிலில் இறைவன் இருக்கிறான் என்பதே பக்தர்களின் நம்பிக்கையில் அடிப்படையில்தான். தொன்றுதொட்டு இறைவன் அளித்த ஆகமங்களின்படித்தான் கோயில்கள் அமைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. கண்ணால் காண முடியாத இறைவனை நாம் நம்பும்போது, அந்த இறைவன் இருக்குமிடமான கோயில் ஏதோ ஒரு ஆகமப்படிதான் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நம்புவதில் என்ன தயக்கம் ? இறைவணக்கத்தில் நம்பிக்கை வைத்துள்ளவர்களுக்கு இந்த சந்தேகம் வரக்கூடாதே?

சில்ப சாஸ்திரங்களை நன்கு அறிந்தவர்கள் அந்த கோயிலின் அமைப்பை கொண்டு சொல்ல முடியும். ஆனால், ஆயிரக்கணக்கணக்கான

வருஷங்களில் தேவைக்கு தக்கபடி தனிப்பயனாக்கம் (customization) செய்திருப்பதாக வல்லுநர்கள் சொல்கிறார்கள். அவற்றுக்கான எழுத்து பூர்வமான விவரங்கள் தற்போது இல்லை என சொல்லப்படுகிறது.

ஒரு கோயிலில் பல காலமாக தொடர்ச்சியாக பூஜைகள் செய்து கொண்டிருக்கும் வம்சாவளியினருக்கு அங்கு கடைபிடிக்கப்பட்டும் ஆகமங்கள் மட்டுமல்லாது அவற்றின் அந்த கோயிலுக்கே உரித்த மாறுபாடுகளும் (பத்ததி) தெரிந்திருக்கும்.

**கேள்வி-9: ஆகமப்படி நிர்மாணிக்கப்பட்ட ஒரு கோயிலில் திருவிழாக்கள் நடத்தப்படுவது அவசியமா?**

பதில்: அவசியமில்லை. அது அந்த ஊர் அல்லது கோயிலின் பாரம்பரியத்தையும், கோயில் வருமானத்தையும், பக்தர்களின் நால் முயற்சியையும், அறநிலையத்துறையின் சீரிய ஆதரவையும் பொறுத்தது. திருவிழாக்கள் நடத்தப்படாததால் அது ஆகம மரபை சாராத கோயில் ஆகிவிடாது

**10 கேள்வி: ஒரு கோயிலில் எத்தனை வேளைகள் அபிஷேகம் மற்றும் பூஜைகள் செய்யப்படுகின்றன என்பது அது ஆகம மரபை சார்ந்தது என்று சொல்ல?**

பதில்: ஒரு கோயிலில் ஒரு வேளை பூஜை செய்தாலும் அது ஆகமத்தை ஒட்டியே அமையும்.